முருகப்பெருமான் துணை

**மகான் ஏனாதிநாத நாயனார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**29.09.2023**, வெள்ளிக்கிழமை

1. ஞானமாம் சுப்பிரமண்யப்பெருமான்
   நல்வழி காட்டும் அவதாரமாக
   தானமாம் அன்னபூரணியின்
   தனிப்பெரும் அன்னதான பலமாக
2. பலமாக வந்த அரங்கனே
   பகருவேன் உன்பெருமை படவே
   வளமுற அறிவுரை ஆசிதனை
   வழங்குவேன் சோபகிருது தரிவை திங்கள்
3. திங்களிலே வியதிகதி புகர்வாரம்
   (சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 12 ம் நாள், 29.09.2023, வெள்ளிக்கிழமை)
   தேசிகனும் கேட்க ஏனாதிநாத நாயனார் யானும்
   ஓங்கார உலகம் அமைய உரைப்பேன்
   உயர்வான பிரணவக்குடில்படைத்து அருளும்
4. அருளும் அரங்கன் சபை
   ஆனந்த ஞானசபையாகும்
   அருளும் பொருளும் தரும்
   ஆறுமுகனார் ஞான சபை ஆகும்
5. ஆகவே உலகோர் நாடியே
   அரங்கமகான் திருவடி பற்றி
   வகைபட அரங்கன் தரும்
   வல்லமையான குடிலமுது உண்டு
6. உண்டு திருவடி தீட்சை
   உலகோர் ஏற்று ஞானமதை
   தொண்டோடு பயின்று வர
   தேசிகனாரின் குருவருள் வழி

7. வழிதனில் வேலவனை காணும்
வல்லமையான திருவருள் பலம்
தெளிவுபட வழியக் கிட்டி
தெய்வீக ஞான வாழ்வு அடைவர்
8. அடையவே அகிலம் எங்கிலும்
ஆற்றல் மிக்க ஞான ஒளி
தடையின்றி சக்தியாகப் பரவ
தரணியில் ஞான ஆட்சி
9. ஆட்சிதான் சமூக மாற்றமாக
அகத்தியர் சன்மார்க்க சங்க
மாட்சிமை மிக்க தருமக்கிளைகள்
மகான்கள் ஆசிபட வளர்ந்து
10. வளர்ந்து எங்கும் மாற்றம்
வள்ளல் தன்மை நிரம்ப
தளர்விலா சேவை மூலமாக
தரணியில் அற்புதம் நிகழும்
11. நிகழவே நீதி கேட்டு அலையா
நீதிமான்களே களமிறங்கிட
செகமே ஞானம் நீதி நிறைந்த
செழிப்பு பாதுகாப்பு பூமி ஆகும்
அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—